சி.சி எண்.136/2022 நாள்: 06.05.2024

அ.சா. 1 மஞ்சுளா

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:</u>**

1. புகார் மனுவை யார் எழுதியது என்றால் போலீசார் எழுதினார். புகார் மனுவில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் மருத்துவமனையில் விசாரித்தார்கள், பின்னர் கையெழுத்த செய்தேன். புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என எனக்கு தெரியாது. நான் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு செல்வதற்கு முன்பே எதிரி ராமச்சந்திரன் சேர்ந்திருந்தார் என்றால் சரியல்ல.

2. நான் தான் முதலில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் எதிரி சிகிச்சையில் இருந்தார். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் எனது வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் இடையில் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்மந்தமாக எங்களுக்குள் பல வருடங்களாக பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. பிரச்சனை இருந்ததால்தான் நான் இடத்தை அளந்தேன் என்றால் சரியல்ல, இருவரும் அளந்தோம். அதில் எதிர்த்தரப்பினர் தனது கூடுதலாக இடம் இருப்பதாக சொன்னார்கள்.

3. எங்களுக்குள் இடப்பிரச்சனை இருந்தது பற்றி ஊர் பெரியவர்களை வைத்து பலமுறை பேசினோம் என்றும், ஆனால் இருவரும் ஒத்துப்போகவில்லை என்றால் சரியல்ல. ஒத்துப்போன பின்னர் தான்இடத்தை அளந்தோம். சம்பவ தினத்தன்று என் கணவர் அ.சா.5 மாதவன் திருவாடனைக்கு ஆடு விற்பனை சம்மந்தமாக வியாபாரத்திற்கு போய்விட்டார். திருவாடனைக்கும் எங்கள் ஊருக்கும் சுமார் 10கி.மீ. தூரம் இருக்கும்.

4. எனது கணவருக்கு சம்பவத்தை பற்றி சொல்லி அவர் வந்தபின்னர் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். எதிரியை நாங்கள் தான் முதலில் அடித்து காயத்தை ஏற்படுத்தினோம் என்றும், எதிரி சிகிச்சை பெற்று வருவதை அறிந்து நானும், எனது மகள் அ.சா.2 அபிநயா மற்றும் அகல்யா மற்றும் எனது அப்பா சின்னத்தம்பி ஆகியோர் சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் 100 வீடுகள் உள்ளது என்றால் 60 வீடு தான் இருக்கும். பல்வேறு சமூகத்தை சார்ந்த நபர்கள் உள்ளார்கள்.

5. எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்தவொரு சம்மந்தமும்இல்லை என்றும், நான் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கட்நத 16.03.2020ம் தேதி நான் வீட்டில் இருந்தேன் என்றும், அப்போது சாட்சி அபிநயா, அகல்யா மற்றும் எனது அப்பா விருந்தாளியாக ஆகியோர் என் வீட்டில் இருந்தார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன்.

6. 2வது எதிரி கம்பால் என் தலையில் அடித்ததால் விழுந்துவிட்டேன் புகார் மனு மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன். எனது வீடு அருகே அழகர்சாமி என்பவரது வீடு உள்ளது. அடுத்து சுப்பிரமணி வீடு உள்ளதா என்றால் இல்லை, முத்துவீரன் என்பவர் வீடு தான் உள்ளது. எனது வீட்டை சுற்றி நான்கு வீடுகள் தான் உள்ளது. அதற்கு தள்ளி மாற்று சமூகத்தை சார்ந்த நபர்களின் வீடுகள் உள்ளது.

7. 2வது எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. நானும், மகளும் தான் 1வது எதிரினை அடித்து காயப்படுத்தினோம் என்றும், அதனால் எங்கள் மீது தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் குற்ற எண்: 48/2020ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் நாங்கள் தான் முதலில் புகார் கொடுத்தோம். எங்கள் மீதும் வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது. எனது நெருங்கிய உறவினர்கள் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் என்றும், அவர்களின் உதவியுடன் எங்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை எவ்வித ˙மேல் நடவடிக்கையும் இல்லாமல் நிறுத்திவைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. நான் எதிரியை அடித்து விட்டு ஓடும்போது கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றும், அதற்கு ஆதாரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் எதிர்த்தார் போல் தான் தார் ரோடு செல்கிறது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.